**கல்கமுவ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்கமுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள்ச் சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கல்கமுவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 20 காணி கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்படாமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளுக்கு இச்சொத்துக்களின் பெறுமதியை உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் 06 கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 19,122,485 தொகை மற்றும் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 187,196 பெறுமதியான உபகரணங்கள் கணக்கீடு செய்யாமை காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு ரூபா 19,309,681 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 839,900 ஆன முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் 2021 ஆம் ஆண்டின் இறுதி மூன்ற மாதங்களின் முத்திரை வருமான கட்டணம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்படாததால் முத்திரைக் கட்டண வருமானம் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க குறித்துக் கொள்கின்றேன். | |
| (ஈ) | மீளாய்வாண்டின் சம்பளம் ரூபா 65,071,751 ஆக இருந்த போதும் அது வருமான செலவினக் கணக்கில் ரூபா 64,870,201 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் சம்பளம் மீள் நிரப்பல் ரூபா 201,550 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும் |
| (உ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 116,706 ஆன இயந்திரங்களை வாடகைக்கு பெற்றுக் கொண்டமைக்காக செலுத்த வேண்டிய தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கும் போதும் மேலும் அப்பெறுமதியை அகற்றாமல் கடன் கொடுத்தோராக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியத் தருகின்றேன். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,186,601 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,641,946 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது சந்தையின் கீழ் மாடியில் 23 கடைகளிலிருந்து ரூபா 358,909 ஆன கடை வாடகை மற்றும் ரூபா 62,970 ஆன தண்டப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த அனைத்து நிலுவைத் தொகையையும் அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | குத்தகை வாடகை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பஸ் நிறுத்துமிடத்தை சுற்றி 45 கடைகள் காணப்படு வதுடன் இக்கடைகள் | நிலுவைத் தொகையான ரூபா 86,571 ஐ அடுத்த ஆண்டின் போது | கடை வாடகை உரிய காலத்தில் மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்படாதிருந்த தாகவும் 17 கடைகளில் இருந்து ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய கூலி ரூபா 86,571 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியத் தருகின்றேன். | செய்யப்பட்டு நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையின் வருடாந்த கேள்வி அடிப்படையில் குத்தகை வழங்குவதற்குரிய 3 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் இடைப்பட்ட காலமாக 8 சந்தர்ப்பங்களின் போது அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 1,353,974 ஆன குத்தகை வாடகை மற்றும் அதற்குரிய ரூபா 24,405 நிலுவைத் தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை ரூபா 1,383,974 ஆகும். அந்நிலுவைத் தொகையையும் தண்டப்பணத்தையும் பெற்றுக் கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன் | உப குத்தகை வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொது சந்தையின் 8 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,758,309 முன்னைய முற்கொடுப்பனவு தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய ரூபா 2,758,309 தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | ஒரே தடவை கொடுப்பனவுத் தொகையை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கல்கமுவ நகரின் அரசன்வெவ வான் கால்வாய் ஒதுக்கில் கல்கமுவ பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் பிரதேச சபையின் அங்கீகாரமின்றி அத்துமீறிய பாரிய அளவிலான வியாபாரக் கட்டிட மொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதுவரை வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும் கட்டிடம் முழுமையான | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நிர்மாணிக்கப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் குறித்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் உரிய காலத்தில் செயற்படாதிருந்த தாகவும் அவதானிக்கப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்கமுவ நகரின் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு அண்மையின் போது பொதுக் கிணறொன்றை நிர்மாணிப்பதற்காக 1967 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 400 அடி அளவிலான காணி 25 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு சபை அங்கீகாரம் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு வியாபாரக் கட்டிடமொன்றை நிர்மாணித்து குத்தகைக்கு வழங்குவதற்காக இருந்த போதும் குத்தகையாளருக்கே கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. குத்தகையாளருடன் கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கையின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் குத்தகையாளர் நிர்மாணங்களை செய்யக் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இக்காணியில் பெரிய அளவிலான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வியாபார நிலையமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டோ அல்லது சபையின் எந்த பரிசோதனையையும் மேற்கொண்டிருக்கவில்லை. இவ்வியாபார இடத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 16,000 ஆன மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்த போதும் அது அறவிடப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக 2017 மே முதல் 2021 திசெம்பர் வரை ரூபா 896,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | 25 ஆண்டுகளுக்கு முன்னர் விடயத்திற்கு பொறுப்பான கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் 2 பேர்ச் இடம் வியாபாரக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு வியாபார உரிமை வழங்கப்பட்டிருந்தது. 2017.05.25 ஆந் திகதி கடை மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அதன் போது மாதாந்தம் கூலி ரூபா 16,000 என குறிப்பிடப்பட்டிருந்தது. அம்மதிப்பீட்டுத் தொகையை அறவிடுவதற்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நிராகரிக்கப்பட்ட காரணமாக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான வர்த்தப் பெறுமதியான காணி, கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட வேண்டிய போதும் குத்தகையாளருக்கு நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் குத்தகையாளர் பாரிய அளவிலான நிர்மாணம் மேற்கொள்வதற்கும் சபையின் இடத்தை தமது விருப்பத்தின் பேரில் மாற்றம் நிலைமையொன்று உருவாகியிருந்தது. காணியின் பெறுமதிக்கு குத்தகை அறவிடப்பட வேண்டும். |

## 3.3 வெளிப்படையான முறைகேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான புதிய பஸ் நிறுத்துமிடத்தல் பயணிகளின் தரிப்பிற்கு உள்ள வெற்று இடத்தில் அத்துமீறிய இரண்டு | புதிய பஸ் நிறுத்துமிடத்திற்கு அண்மையில் நிர்மாணிப்பதற்கு | சபைக்குச் சொந்தமான பஸ் நிறுத்துமிடத்தில் வெற்று இடத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | மாடிகளாக கடைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு 20 அடி அகலம் 20 அடி நீளம் அளவில் 6 தூண்கள் இட்டு கடைகளை நிர்மாணிக்கப்பட்டு slab ஒன்று இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது 2022 மே 04 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. சபையின் உயர்மட்ட முகாமை இந்த அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தயார்படுத்தப்பட்டிருந்த பகுதி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | அத்துமீறிய நிர்மாணத்தை மேற்கொள்ளும் வரை சபையின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புதிய பஸ் நிறுத்துமிடத்தில் சபைக்குச் சொந்தமான 04 ஆம் இலக்க கடை 1993 யூலை மாதத்தின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இக்கடைக்காக 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 52,920 ஆன நிலுவை தொகை கொடுப்பனவு செய்யப்படா திருந்ததுடன் 2022 மே 04 ஆந் திகதி பரிசோதனை சந்தர்ப்பம் வரை பஸ் நிறுத்துமிடத்தில் 3 ஆம் மற்றும் 4 ஆம் இலக்க கடைகளை கல்கமுவ முன்னால் தலைவரிடமிருந்து குத்தகையாளர் ஒருவர் குத்தகைக்கு பெற்றுக் கொண்டு மாதமொன்றிற்கு ரூபா 40,000 கொடுப்பனவு செய்வதாக அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ஆதனமொன்று அத்துமீறி கைப்பற்றப்பட்டு அதன் தன்மையை முழுமையாக மாற்றி 03 மாடிகளுடன் கூடிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப் பட்டிருந்த போதிலும் பிரதேச சபையின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | 04 ஆம் இலக்க கடைக்காக மாதாந்த கூலி கொடுப்பனவு செய்வது உறுதிப்படுத்தப்பட்ட போதும் பல மாதங்களாக கொடுப்பனவு செய்யாமல் நிலுவைத் தொகை காணப்பட்டதால் குறித்த பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2016 ஆம் ஆண்டு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. குறித்த கடிதத்திற்கு பதிலாக சபைக்கு உரித்துக் கூறும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு நபரொருவர் 2016.05.18 ஆந் திகதி எழுத்து மூலம் அறிவித்திருந்தார். இக்கடை தொடர்பாக உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அத்துமீறிய நிர்மாணம் இருந்தால் உரித்தை உறுதிப்படுத்தி நிர்மாணத்தை அகற்றுமாறும் பின்னர் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்தி சட்டரீதியான நடவடிக்கை எடுத்து சபை ஆதனங்களை பாதுகாப்பதற்கு சபையின் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டு பிரதேச சபை பலப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் மொன்னகுலம சுடலை திருத்த வேலைகளுக்காக ரூபா 3,252,122 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2022 மே 04 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது இயற்கை கற்களில் பூச்சினை ஒரு மீற்றர் அளவில் பூசுவதற்கு ரூபா 56,539 ஆன தொகையும் சுடலைச் சாலையில் சிறுகற்களில் இரண்டு தடவை பூச்சு பூசுவதற்கு ரூபா 753,246 தொகையும் அச்சுக்கல் வீதிகளில் Themoplatic paint (Yellow) மஞ்சள் நிற கோடொன்று வரைவதற்கு ரூபா 302,454 தொகை செலவிட செலவிடப்பட்டிருந்தது. | கருங்கல் பகுதிகளில் அலங்காரத்திற்காக அச்சுக்கற்களில் அலங்காரப்படுத்துவதற்கு பூச்சு பூசப்பட்டுள்ளது. | பணம் செலவிடப்பட்டு நிர்மாணம் மேற்கொள்ளப்படும் போது செயற்திறனாகவும் சிக்கனமாகவும் வேலைகள் நிறைவேற்றப்படல் வேண்டும். வெளி அலங்காரத்திற்காக இயற்கையில் அமைந்துள்ள கற்களில் பூச்சு பூசுவது போன்ற பயனற்ற செலவுகளை மேற்கொள்ளக் கூடாது. |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் கிராமிய மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிஏற்பாட்டின் பேரில் யூ.பீ.வண்ணிநாயக்க விளையாட்டரங்கின் பார்வையாளர் மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,948,898 தொகைக்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2022 மே 04 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது அஸ்பஸ்டர்ஸ் கூரைதகடுகளுக்காக ரூபா 184,642 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும்இப்பார்வையாளர் மண்டபத்தில் முன்னர் பயன்படுத்தியிருந்த அஸ்பஸ்டர்ஸ் ஷீட் பயன்படுத்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. 30 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் 4 மில்லிமீற்றர் அலுமினியம் composite panels பொருத்துவதற்கு ரூபா 187,550 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 24 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் பழைய் அஸ்பஸ்டர்ஸ் சிதைவடைந்துள்ள துவாரம் இருப்பதால் அவற்றை பயன்படுத்த முடியாது. composite panels பொருத்துதல் அளவீட்டுப் பத்திரத்தில் உள்ள தவினை திருத்தம் செய்கின்றேன். . | புதிய ஷீட் இடப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. பட்டியலுக்காக கொடுப்பனவு செய்யும் போது சரியான அளவீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் |